


திண்டுக்கல்லில் தோழர் என்.வரதராஜன் இறுதி ஊர்வலத்தைத் தொடர்ந்து மின் மயானத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே.வரதராசன், மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முன்னாள் மக்களவை உறுப்பினர் அப்பாத்துரை, திமுக முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அதிமுக முன்னாள் எம்.பி. சீனிவாசன், ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் ஆகியோர் பேசினர்.

## உழைக்கும் வர்க்கத்திற்காக 70 ஆண்டுகாலம் அயராத உழைப்பு

# மகத்தான மக்கள் தலைவர் என்.வி.

# இரங்கல் கூட்டத்தில் தலைவர்கள் புகழஞ்சலி

திண்டுக்கல், ஏப்.12-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவர்களில் ஒருவரான தோழர் என்.வரதராஜன் ஏப்ரல் 10ம் தேதி சென்னையில் காலமானார். அவரது இறுதி நிகழ்ச்சி புதனன்று அவரது சொந்த ஊரான திண்டுக்கல்லில் நடைபெற்றது. அவரது இறுதி நிகழ்ச்சி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று தங்களது கண்ணீர் அஞ்சலியை உரித்தாக்கினர். புதன் மாலை 6 மணிஅளவில் தோழர் என்.வியின் உடல் திண்டுக்கல்லில் உள்ள மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக கட்சியின் மாநிலச்செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துப்பேசினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே.வரதராசன் தமது இரங்கல் உரையில், தந்தையை இழந்தால், தாயை இழந்தால், ஒரு சகோதரனை இழந்தால் நாம் கதறி அழுவோம். அதுபோல் இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவரை இழந்து தவிக்கிறோம். தாம் ஏற்றுக் கொண்ட லட்சியத்தில் உறுதியாக இருந்தவர். கடைசி நிமிடம் வரை உழைப்பாளி மக்களை பற்றியே சிந்தித்தார். கோழிக்கோட்டில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் பங்கேற்றார். அனைத்துக் கட்சியினர், பொதுமக்களின் பாராட்டுதலையும் பெற்றவர் தோழர் என்.வரதராஜன்.

ஏப்ரல் மாதம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அவருக்கு அம்பேத்கர் விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தலித் மக்களுக்காகப் போராடிய அவர், அந்த விருதைப் பெறும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நேரத்தில், அவர் காலமாகிவிட்டார். அவரின் அயராத உழைப்பை நாம் பாடமாக எடுத்துக் கொண்டு, அவர் விட்டுச் சென்ற சிறந்த பணியை நாம் தொடர்ந்து மேற்கொள்வோம் என்றார்.

**ஜி.ராமகிருஷ்ணன்**

தோழர் என்.வரதராஜன் ஒரு மக்கள் போராளி. எளிய வாழ்க்கை வாழ்ந்த அவர், அனைவரிடத்திலும் இனிமையாக பழகுவார். அருந்ததிய மக்களுக்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கவேண்டும் என கட்சியின் சார்பில் குரலெழுப்பி, அதை அவர்களுக்கு பெற்றுத்தந்த மகத்தான போராளி. தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் நலன்களுக்காகவும் அயராது பாடுபட்டவர். 6 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர். 2 ஆண்டு காலம் தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டவர். கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றை கூறும்போது 60 ஆண்டு காலம் உழைப்பாளி மக்களுக்காக போராடிய தோழர் என்.வி.யின் வரலாறும் பதிவு பெறும் என்றார்.

**டி.கே.ரங்கராஜன் எம்.பி.**

தலித் விடுதலை மற்றும் வர்க்கப் போராட்டம் என்ற இரண்டிலும் கடந்த 70 ஆண்டுகளாக தன் வாழ்நாளை என்.வி.செலவழித்துள்ளார். தலித் இயக்கத் தலைவர்கள் அதியமான், ஜக்கையன் ஆகியோர் பேசியது என்.வி.யின் குரல். அது என்.வி.யின் குரல் அல்ல மார்க்சிஸ்ட் கட்சியின் குரல், தந்தை பெரியாரின் குரல், டாக்டர் அம்பேத்கரின் குரல். அந்த குரலைத் தான் என்.வி. உரக்க எழுப்பினார். அதைத் தான் இங்கு தலித் தலைவர்கள் எழுப்பினர். என்.வி. மறைவையொட்டி நூற்றுக்கணக்கான தலித் இளைஞர்கள், தொழிலாளர்கள் அலை அலையாக வந்து அஞ்சலி செலுத்துகிற பாங்கைப் பார்க்கிற போது நான் பிரமித்துப் போகிறேன். ஒரு மகத்தான மக்கள் தலைவனுக்கு அவர்கள் நெஞ்சார செலுத்துகிற அஞ்சலியாகத் தான் நான் பார்க்கிறேன். பெரியாரின் கொள்கையான தீண்டாமை எதிர்ப்புக் குரலை தோழர் என்.வி. முன்னெடுத்துச் சென்றார். அந்த கடமைகளை நாம் நிறைவேற்றுவதுதான் என்.வி.க்கு செலுத்துகிற அஞ்சலியாக இருக்கும்.

**இரா.அதியமான்**

அன்று கீழ்த்தஞ்சையில் சாணிப்பால், சவுக்கடிகளில் இருந்து எங்களைப் பாதுகாத்தது செங்கொடி இயக்கம். இன்றைக்கு உத்தப்புரம் தீண்டாமைச் சுவரானாலும், கோவை தீண்டாமைச் சுவரானாலும், அதை எதிர்த்த போராட்டத்தில் தோழர் என்.வி. நடந்து கொண்டவிதம், அவர் அப்பிரச்சனையைக் கையாண்ட விதம் எல்லாம் எங்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. அருந்ததியர் மக்களுக்கு 3 சதவீத உள் இட ஒதுக்கீட்டுக்கான போராட்டம் நடந்த போது அப்போதைய தமிழக முதல்வராக இருந்த கலைஞரிடம் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றோம். எங்களது பிரச்சனையை கலைஞர் முன்னிலையில் எங்களை விளக்க வைத்தார் என்றார்.

**கு.ஜக்கையன்**

பள்ளியில் புதிதாக சேர்ந்த போது, தங்கள் பெற்றோர் என்ன செய்கிறார்கள், உங்கள் பெயரென்ன என்று அறிமுகம் செய்யச் சொல்வார் ஆசிரியர். எல்லோரும் தங்கள் பெற்றோரை பெருமையுடன் அறிமுகம் செய்வார்கள். ஆனால் நான் என் தந்தை ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளி, என் தாய் மலம் அள்ளும் தொழிலாளி என்று அறிமுகம் செய்ய சங்கடப்பட்டு கூலித் தொழிலாளி என்று அறிமுகம் செய்து கொள்வேன். அந்த அளவிற்கு எனது சமுதாயம் இழிவான நிலையில் இருந்தது. ஆனால் நான் ஒரு மாதாரி, நான் ஒரு அருந்ததியன் என்று மார்தட்டி சொல்லும் அளவிற்கு துணிச்சல் கிடைத்தது என்றால் அது தோழர் என்.வி. போன்ற சமூகப் போராளியால் கிடைத்தது தான் என்றார்.

திமுக முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அதிமுக மாவட்ட அவைத் தலைவர் சீனி வாசன், கே.பாலபாரதி எம்எல்ஏ, சிபிஐ சார்பில் அப்பாத்துரை, மதிமுக சார்பாக மாநிலச் செயலாளர் எஸ்.மகபூப்ஜான், வேடசந்தூர் முன்னாள் காங்கிரஸ் எம்எல்ஏ தண்டபாணி, பாமக மாநிலச் செயற்குழு உறுப்பினர் கோபால், தேமுதிக கிழக்கு மாவட்டச் செயலாளர் ரவிக்குமார் ஆகியோர் இரங்கல் தெரிவித்துப் பேசினர்.



இரங்கல் கூட்டத்தில் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் பேசினார். உடன் அனைத்துக் கட்சித் தலைவர்கள், தோழர்கள்.

# என்.வரதராஜன் மறைவு: ஜெயலலிதா, கருணாநிதி இரங்கல்

சென்னை, ஏப்.10 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.வரதராஜன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளதாவது:

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில முன்னாள் செயலாளர் என். வரதராஜன் அவர்கள் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி செவ்வாயன்று காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

என்.வரதராஜன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் மக்கள் கருத்துக்களை அமைதியான முறையில் எடுத்துரைத்து, தன் பணியை செவ்வனே ஆற்றியவர். அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினராகவும், 10 ஆண்டுகள் மாநிலச் செயலாளராகவும் பணியாற்றியவர். அனைவருடனும் எளிமையாகவும், அன்புடனும் பழகி வந்த திரு. வரதராஜன் அவர்களின் மறைவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு பேரிழப்பாகும்.

என்.வரதராஜன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கருணாநிதி**

திமுக தலைவர் கருணாநிதி வெளியிட்டிருக்கும் இரங்கல் குறிப்பில், உழைக்கும் மக்களுக்கு உறுதுணையாக விளங்கி, மக்களாட்சி மாண்பினை போற்றி; மனித நேய காவலராக திகழ்ந்த என் அருமைத் தோழர் வரதராஜனின் மறைவால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் பாட்டாளி மக்களுக்கும், தோழர்களுக்கும் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் என் இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். தோழர் வரதராஜனின் இழப்பு தமிழக அரசியலில் தொழிலாளர் வர்க்கத்திற்கு பெரும் இழப்பு. ஜனநாயகத்திற்கு பெரும் இழப்பு.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**வைகோ**

மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழுவின் முன்னாள் மாநிலச் செயலாளர், அரசியல் எல்லைகளைக் கடந்து அனைவரிடமும் நேசமும், பாசமும், நட்பும், பாராட்டும் பெற்ற உன்னதமான பண்பாளர் தோழர் என். வரதராஜன். எதிர்பாராதவிதமாக இயற்கை எய்தினார் என்பதை அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். தன்னலமற்ற ஒரு தோழரை இழந்து வாடும் பொதுவுடைமை தோழர்களுக்கும் வரதராஜன் குடும்பத்தாருக்கும் மதிமுக சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கி. வீரமணி**

படிப்படியாக கட்சியில் பல பொறுப்புகளை ஏற்று மாநிலச் செயலாளர் என்கிற அளவுக்கு உயர்ந்து, தொண்டின் முத்திரைகளைப் பொறித்தவர். தியாக நெருப்பில் புடம்போட்ட தோழர் என். வரதராஜன் மறைவுற்றார் என்ற தகவல் அறிந்ததும் மன வேதனை அடைந்தோம். மதவெறி மாய்ப்போம் என்ற இயக்கத்திலும், சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற பிரச்சாரக் களத்திலும் நம்மோடு தோளோடு தோள் நின்று குரல் கொடுத்தவர். முதுபெரும் வீரரை இழந்த அக்கட்சிக்கும் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொன்.ராதாகிருஷ்ணன்**

தனது வாழ்நாள் முழுவதும் தொழிலாளர் நலனுக்காக முழுமையாக உழைத்தவர். அப்பழுக்கற்ற ஒரு தலைவராகவும் பழகும் விதத்தில் இனிமையோடு ஒரு சாதாரண தொண்டர் மனநிலையை கொண்டவர் வரதராஜன்.

# என்.வரதராஜன் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல்

சென்னை, ஏப். 10 –

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.வரதராஜன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு அமைப்புகள் விடுத்துள்ள இரங்கல் செய்திகள்:

**ஏ.கே.பத்மநாபன்**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் சிஐடியு அகில இந்திய தலைவருமான ஏ.கே.பத்மநாபன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தோழர் என்.வரதராஜன் மறைவு தமிழக தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்கு பேரிழப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

**அ.சவுந்தரராசன்**

சிஐடியு மாநிலக்குழு சார்பில் பொதுச் செயலாளர் அ. சவுந்தரராசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தோழர்கள் ஏ.பாலசுப்பிரமணியம், ஆர். ராமராஜ், மதனகோபால், வி.ஏ. கருப்பசாமி போன்ற தலைவர்களுடன் இணைந்து தோல் பதனிடும் தொழிலாளர் நலனுக்காக பாடுபட்டவர்; பஞ்சாலை, தோல் பதனிடும் தொழிலாளர், விவசாயத்தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடியவர்; வேடசந்தூர் மற்றும் திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்து தொழிலாளி வர்க்க உரிமைகளுக்காக குரல்கொடுத்தவர். வாழ்க்கை முறையில் எளிமையானவராக, அனுபவமிக்கவராக மாற்றாரும் மதிக்கத்தக்கவராக பொதுவாழ்வில் முத்திரை பதித்தவர்.

அன்னாரது மறைவுக்கு சிஐடியு மாநிலக்குழு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

**தீண்டாமை ஒழிப்பு முன்னணி**

தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநிலத் தலைவர் பி. சம்பத், மாநில பொதுச் செயலாளர் கே.சாமுவேல் ராஜ் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தோழர் என். வரதராஜன் கட்சியின் மாநில செயலாளராக இருந்த போது தான் தீண்டாமை ஒழிப்பு முன்னணி துவக்கப்பட்டது. அதன் முதல் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், தொடர்ந்து அமைப்புக்கு வழிகாட்டி வந்தார். அருந்ததிய மக்களுக்கு 3 சதவீத உள்ஒதுக்கீடு கிடைப்பதில் அவருடைய பங்கு முக்கியமானது. உத்தப்புரம் உள்ளிட்ட தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில் அவர் முன்னின்றார். அவருடைய இழப்பு தமிழக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டார்.

**தமுஎகச**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் – கலைஞர்கள் சங்கத்தின் கவுரவத் தலைவர் இரா.கதிரேசன், தலைவர் ச.தமிழ்ச்செல்வன், பொதுச் செயலாளர் சு.வெங்கடேசன் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமுஎகச வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்திய தோழர் என். வரதராஜன் கலைஞர்கள் மீதும், எழுத்தாளர்கள் மீதும் பேரன்பு கொண்டவர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

**இரா.அதியமான்**

ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் இரா.அதியமான் விடுத்துள்ள செய்தியில், மாபெரும் தலைவர் தோழர் என். வரதராஜன் அவர்களின் மறைவு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகப்பெரிய இழப்பு. குறிப்பாக, அருந்ததியர் மக்களை எழுச்சி பெறச் செய்து மாநாடுகள் நடத்தி, மூன்று சதவிகிதம் உள்இட ஒதுக்கீடு பெறுவதற்கு அவர் ஆற்றிய பணியை அருந் ததியர் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். இது ஒட்டு மொத்த மக்களின் இழப்பை விட, அருந்ததியர் மக்களின் இழப்பாகக் கருதுகிறேன். அவருக்கு ஆதித்தமிழர் பேரவை தன்னுடைய வீர வணக்கத்தைச் செலுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

என்.வரதராஜன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் விடுத்துள்ள செய்தியில், அவர் பொதுவாழ்வில் தூய்மையாக நேர்மையாக பணியாற்றிய அப்பழுக்கற்ற தலைவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஜனதா தள பொதுச் செயலாளர் க.ஜான்மோசஸ் உள்ளிட்ட தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.